உ
சிவமயம்

வடகோவைச்

# சித்திரவேலவர் ஊஞ்சற் பதிகம்



கந்தரோடை
பிரம்மஸ்ரீ வி. சிவசுப்பிரமணியக் குருக்கள்
இயற்றியது.

சித்தாந்தபாநு
பிரம்மஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்களால்
வெளியிடப்பட்டது.

இரண்டாம் பதிப்பு
1971

# முகவுரை

யாழ்ப்பாணத்துக் கோப்பாயிற் கோயில்கொாண் டெழுந்தருளியிருக்கும் சித்திரவேலாயுதப் பெருமான்மீது பாடப்பட்ட பிரபந்தமான இவ்வூஞ்சற்பதிகம் எழுபத் தைந்தாண்டுகளின் முன் இவ்வூரில் வாழ்ந்த தமிழ்ப்புலவர் வி. சிவசுப்பிரமணியக் குருக்களால் இயற்றப்பட்டது. சென்னையிலிருந்த ஸ்கொட்டிஷ் பிரஸ் என்னும் அச்சகத் தில் 1890 ஆம் ஆண்டளவில் நூலாசிரியரால் அச்சிடு வித்து வெளியிடப்பட்டது. அம்முதற்பதிப்புப் பிரதிகள் இப்போது கிடைத்தற்கரியனவாய் விட்டமையாலும், ஊஞ்சற்றிருவிழா உபயகாரரும் பிறரும் பலமுறை கேட்டுக் கொண்டமையாலும், நூலாசிரியரின் மகள்வழிப் பேரனை பிரம்மஸ்ரீ சோ. சுப்பிரமணியக்குருக்கள் பேணிவைத்திருக் கும் கையெழுத்துப் பிரதியை அடியொற்றி இவ்விரண் டாம் பதிப்பு வெளிவருகின்றது. இவ்வாசிரியராற் பாடப் பட்ட இரு தனிப்பாடல்களும் இதன் இறுதியில் சேர்க்கப் பட்டிருக்கின்றன. சுருக்கமான தலவரலாறும் இப்போது எழுதப்பட்டு இப்பதிப்பில் இணைக்கப்பட்டிருக்கின்றது.

இதனை வெளியிட அனுமதி வழங்கியதற்காக நூலா சிரியரின் புதல்வரான பிரம்மஸ்ரீ சு. இரத்தினசாமிக் குருக்களவர்களுக்கும், அச்சுச்செலவை ஏற்றுக்கொண்ட அன்பருக்கும் எல்லோர் நன்றியும் உரியதாக.

கோப்பாய், 7-6-71. பதிப்பாளர்.

உ

# வடகோவைச் சித்திரவேலாயுதசுவாமி
# கோவில் வரலாறு

இற்றைக்கு நூற்றுப்பத்தாண்டுகளின்முன், கோப்பாய்க் கிராமத்தின் வடபகுதியில் வாழ்ந்த சைவவேளாளருள் அம்பலவாணர் வேலுப்பிள்ளை என்னும் முருகபக்தர் ஒருவர், செல்வமும் செல்வாக்கும் மிக்கவராய் வாழ்ந்து வந்தார். அக்காலம் இந்தியாவும் இலங்கையும் பிரயாணத் தடைகள் எவையுமின்றி, எவரும் எங்கும் சென்றுவரக் கூடிய வசதி பெற்றிருந்த காலமாதலால், இப்பெரியார் ஆண்டுதோறும் தென்னிந்தியாவிலுள்ள புண்ணியத்தலங்களுக்கு யாத்திரை செய்யும் வழக்கமுடையவராய் இருந்தார். திருச்செந்தூர்த்தலத்திலும் அங்கு எழுந்தருளியிருக்கும் அறுமுகப்பெருமான் மீதும் ஆராதபக்திகொண்டு கந்தஷஷ்டி விரதத்தை அநுஷ்டித்து வந்தார். தாம் வாழ்ந்த இவ்வூரில் முருகப்பெருமானுக்கு ஆலயம் இல்லாமையால், புதியதாக ஓர் ஆலயம் அமைத்து வழிபாடியற்ற விரும்பியிருந்தார். அவ்வேளையில் அவருடைய மனைவியார் காலகதியடையவே தெய்வீகவாழ்வில் மேலும் ஈடுபாடு கொண்டார். மனைவியணிந்திருந்த தாலிக்கொடியை விற்று வேலாயுதமொன்றைச் செய்வித்தார். தம்முடைய தோட்டமாகிய ஊரியாட்டி என்னுமிடத்தில் அவ்வேலாயுதத்தைத் தாபிக்க வேண்டுமென்னும் ஆவல் அவருக்கு இருந்தது. ஆயினும், திருவருள் வழிப்படுத்தியமையாற்போலும், தம்முடைய குலகுருவான வேதக்குட்டிக் குருக்களிடம் தம் விருப்பத்தைத் தெரிவித்து அவருடைய ஆலோசனையைக் கேட்டார். சிவாநுபூதிச் செல்வரான குருக்கள் இதே சிந்தனையோடிருந்தபோது அன்றிரவு ஒரு கனாக்கண்டார். நாற்சந்திக்கு மேற்குப்பக்கத்தில் பற்றைகளுக்கும் பாறைகளுக்கும் இடையே இரண்டு ஈச்சமரங்கள் செழித்து வளர்ந்திருப்பதைக் கனவிலே கண்ட குருக்கள், அவ்விடமே கோவிலுக்கும் கிணற்றுக்கும் உரிய நிலையமென்றும், அங்கேயே ஆலயம் அமைக்கவேண்டுமென்றும் அன்பர் வேலுப்பிள்ளைக்கு அறிவுறுத்தினர். அவ்விடம் தாம் குடியிருந்த இடத்திற்கு வெகுதூரத்தில் சனசஞ்சாரமற்ற பகுதியில் இருந்தபோதிலும் குருவாக்கில் பெருமதிப்புக் கொண்டவராகையால், வேலுப்பிள்ளை விரைவிலேயே இவ்விடத்தில் சிறிய கோவில் கட்டித் தம்முடைய குருவைக்கொண்டே வேலா

யுதப் பிரதிஷ்டை செய்வித்து நித்திய பூசைக்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்து வைத்தார். சில ஆண்டுகளில் கோவில் சாந்துக்கட்டடமாக மாற்றம் பெற்றது.

அக்காலத்தில் இராதம்பு என்னுமிடத்திற் குடியிருந்த வேதக்குட்டிக்குருக்கள், நித்தியபூசையை நியமமாகச் செய்வதற்காகவும், கட்டட வேலைகளைக் கவனிப்பதற்காகவும் கோவிலின் தெற்கு வீதியில் வந்து குடியேறினர். பயங்கரமான இவ்விடத்தில் குருக்களுக்கும் மனைவி மக்களுக்கும் சித்திரவேற்பெருமானே அல்லும் பகலுந் தோன்றாத்துணையாயிருந்து பாதுகாத்தார்.

இக்குருக்களுடைய முன்னோர்கள், பாடல் பெற்ற தலமான திருப்புகலூரிலிருந்து தமிழ் மன்னரால் அழைத்து வந்து நீர்வேலியிற் குடியேற்றுவித்த ஆதிசைவ சிவாசாரிய பரம்பரையினரென்றும், இவர்களுள் ஒருவரான சோமசுந்தரக்குருக்கள் (சோமுஐயா) என்பவர், கோப்பாய் வடக்கிலிருந்த சைவமக்களால் அழைத்து வந்து அப்பிளானை (வில்வையடி) என்னுமிடத்தில் குடியமர்த்தப்பட்டவரென்றும், இவருடைய மகன் சுப்பிரமணியக் குருக்களென்றும், சுப்பிரமணியக்குருக்களுடைய புதல்வரே ஆலயத்தின் பிரதிஷ்டாசாரியரான வேதக்குட்டிக் குருக்களென்றும் அறிந்தோர் கூறுவர்.

1897ஆம் ஆண்டில் கர்ப்பக்கிருகமும் அர்த்தமண்டபமும் வெள்ளைக்கல்லாலும், அடுத்த இரு மண்டபங்களும் வைரவர் கோவிலும் சாந்தினாலும் கட்டப்பட்டுக் குருக்களின் புதல்வராகிய வே. சபாரத்தினக்குருக்களால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. கர்ப்பக்கிருகத்தின் பின்புறச் சுவரிற் பொறிக்கப்பட்டிருக்கின்ற ''1897 ஆண்டில்... ஆதிமுயற்சி'' என்னும் சிலாசாசனத்தின்மூலம் இதனை நன்கு அறியலாம்.

சில ஆண்டுகளின்பின் மடைப்பள்ளி, களஞ்சியம், கொடித்தம்பக்கொட்டகை, சுற்றுமதில் என்பன கட்டப்பட்டன. அக்காலத்தில் சபாரத்தினக்குருக்களுடைய மேற்பார்வையில் அவருடைய புதல்வரும் இப்போதைய குருக்களின் தந்தையாருமான சோமசுந்தரக்குருக்களால் இரண்டு ஆண்டுகளாக அலங்கார உற்சவம் மிக ஆடம்பரமான முறையில் நடத்தப்பட்டுப் பின்பு நிறுத்தப்பட்டதென்று முதியவர்கள் கூறுகின்றார்கள்.

பின்பு 1916ஆம் ஆண்டில் தொடங்கிய கோபுரவேலை சில வருஷங்களின் பின்பு நிறைவேறியது. இக்காலத்திலேயே வள்ளி தேவசேனு சமேதரான அறுமுகப்பெருமானின் திருவுருவப் பிரதிஷ்டையும் நிகழ்ந்தது. 1930ஆம் ஆண்டளவில் கொட்டகை வேலைகள் நிறைவெய்தியாக சாலை வசந்தமண்டபம் முதலியனவும் கட்டப்பட்டன.

1942ஆம் ஆண்டில் ஷண்முகராலயமும் மகாமண்டபமும் ஸ்நபன மண்டபமும் கல்-திருப்பணியாகக் கட்டத் தொடங்கிச் சில வருஷங்களில் முற்றுப்பெற்றன. விநாயகராலயமும் வைரவராலயமும் கட்டப்பட்டு, விநாயகர் பாலசுப்பிரமணியர் முத்துக்குமாரசுவாமி முதலிய திருவுருவங்கள் அடியவர்களின் உபயமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இப்போதைய குருக்களின் தலைமையில் 1960ஆம் ஆண்டளவில் இக்கோவிலின் மூன்ருவது கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடந்தது.

கந்தஷஷ்டியின் கடைசி நாளில் சூரன்போரும் மறுநாள் திருக்கலியாணமுமாக இருவிழாக்கள் பல ஆண்டுகள் நடந்து, பின்பு ஏழுநாள் உற்சவமாக வ்ளர்ச்சியடைந்தன. இவற்றைவிட மார்கழித்திருவாதிரை ஊஞ்சல் விழாவும், திருக்கார்த்திகை, ஐப்பசிவெள்ளி, மணவாளக்கோலம் என்னும் விழாக்களும் இவ்வாலயத்தில் வெகுகாலமாய் நடந்து வரும் விழாக்களாகும். பெரும்பாலான விழாக்களில் உற்சவமூர்த்தியாக வேலாயுதமே எழுந்தருளுவ்து வ்ழக்கமாயிருந்து வ்ந்தது. ஆகமவிரோதமான இக்காரியம், பேரன்பர் சிலரின் உபயமாகப் பாலசுப்பிரமணியர் முத்துக்குமாரசுவாமி ஆகிய மூர்த்திகள் வ்ந்தவுடன் கைவிடப்பட்டது.

வெகுகாலத்திற்குமுன் தொடங்கி இடையிற் கைவிடப்பட்டிருந்த சித்திரத்தேர்வேலை, தேர்த்திருப்பணிச் சபையின் அயராமுயற்சியால் நிறைவெய்தி 1967ஆம் ஆண்டிலிருந்து ஷண்முகப்பெருமான் எழுந்தருளிக் காட்சியளிக்க உதவுகின்றது.

ஆறு ஆண்டுகளின்முன் மகோற்சவ்ம் என்னும் கொடியேற்றத் திருவிழாவைத் தொடங்கி நடத்தி முருகனருளுக்குப் பாத்திரமாகிவரும் பேரன்பர்கள் மேன்மேலும் ஆலயப்பணிகளில் ஈடுபட்டுப் பெருமானின் பரிபூரண கிருபையையும் பெற்று நல்வ்ாழ்வு வ்ாழ்வ்ார்களாக.

——

உ

சிவமயம்

# வடகோவைச் சித்திரவேலவர்
# திருவூஞ்சற் பதிகம்

## காப்பு

சீர்பூத்த செழுஞ்சாலி வளனேயாதி
    செறிதரு நல் வடகோவை திகழ்வதாகிப்
பார்பூத்த பயனுறுமுந் துவத்தை*யாகப்
    பகரிடமார் சித்திரவேற் பகவன்மீதாத்
தார்பூத்த தமிழூஞ்சற் கவிதைபாடச்
    சகலசரா சரமுமுயச் சார்ந்தேயோங்குங்
கார்பூத்த கரிமுகனேங் கரனுஞ்சித்திக்
    கணபதிதன் திருத்தாள்கள் காப்பதாமே

## பதிகம்

சீர்மேவும் அங்கமவை கால்களாகச்
    சிறந்ததரு மாதிகளுத் திரமதாகப்
பேர்மேவும் இருஞானம் விட்டமாகப்
    பெருமைதரு நாதவிந்து விதானமாக
ஏர்மேவு மண்டபமொன் றிடையேவேத
    எழில்வடமார் பிரணவநற் பலகையேறிப்
பார்மேவு வடகோவைச் சித்ரவேலா
    பகருலகம் உயவினிதா ஆடிருஞ்சல். 1

சலசைநிகர் அணிமருவு தெய்வப்பெண்கள்
    தரளவொளி குல்வுவடந் தனைத்தொட்டாட்டப்
பலசதியும் நடமடவார் பயிற்றி யாடப்
    பண்ணிசையாழ் முனிமுதலோர் பணிந்துபாடக்
குலசயில நிகர்தடந்தோள் விபுதர்யாருங்
    குறைவின்மலர் மழைசொரிந்து குழுமிவாழ்த்தக்
கலசமுலை வள்ளிபங்கா ஆடிருஞ்சல்
    கதிதருசித் திரவேல ஆடிருஞ்சல் 2

*உந்துவந்தை—இடப்பெயர்.

அருமறையின் முடிவாகி அநாதியாகி
அப்பாலுக் கப்பாலாய் அறியொணாத
பொருவரிய பொருளாகிப் பூதமாகிப்
பூதலத்தோர் வினைதீர்க்கும் புனிதமாகிப்
பெருமையுறு பிரணவமாய் நின்றவீசன்
பிரசமலர் போல்நயனம் பிறங்கித்தோன்றித்
தரைபுகழும் சரவணவா வியில்வளர்ந்த
சண்முகசித் திரவேல ஆடிரூஞ்சல் 3

பங்கயமா மலர்ப்பீட முறைவோனாதிப்
பண்ணவர்காண் பரியபரப் பிரமதேவே
தங்குமொரு நாற்பதுமுக் கோணத்தூடு
தகவுபெற அமர்வோனே சமயாதீதா
துங்கமிகுஞ் சருவவியா பகமேயாதி
தூயவறு குணமாறு வதனமாக
அங்கயல்பாய் தருகழனிக் கோவைமேவி
அருள்தருசித் திரவேல ஆடிரூஞ்சல் 4

நற்சிவனர்ச் சனையதனில் வழுவிஞேரா
நண்ணுமொரா யிரவர்தமை நாடிக்கூட்டிக்
கற்குகைவைத் தவரையெலாம் ~~எண்~~ணும்பூதம்
கருதுதொகை தனிலொருவர் காணுநாளில்
சிற்பரனார் பூசைதனிற் புலனீத்தங்கட்
சார்தருவோ ரொடுமுறுநக் கீரன்ஞனும்
சொற்றுயர்நீத் துயப்பூதம் அறவேல்தொட்ட
துதிபுனைசித் திரவேல ஆடிரூஞ்சல் 5

செந்தமிழின் வளர்வுதரு சங்கமேவித்
திகழ்தருமக் கூடறனிற் சிறந்தவாகைச்
சுந்தரமார் உக்கிரபாண் டியனேயாகித்
தொல்லுலகம் புரந்தருளுந் தூயநாதா
சந்திரனேர் ஒளிவதனும் புயனே அன்பர்
தமதகமே குடிகொளுநற் சண்முகேசா
அந்திருமா தமர்தருநல் வடகோவைக்கண்
அமர்தருசித் திரவேல ஆடிரூஞ்சல்

தற்பரனே சதுர்வேதம் தலைகாணுத
சடட்சரனே அருள்வடிவே சாமிநாதா
சிற்சபைசேர் தருநாதன் அருள்வேலோனே
செந்தமிழ்சேர் சங்ககவி வாணர்நாதா
சற்குருவே பிரணவவுட் பொருளைவேதன்
தனைவினவிச் சிறையிலிடுந் தலைமைமேவும்
அற்புதனே அகிலமுய வடகோவைக்கண்
அமர்தருசித் திரவேல ஆடிரூஞ்சல்

கருவிதரு மெய்ப்புலனுங் காட்டுவானுங்
காண்பவனுங் காட்சிதரு பொருளுமாகி
விரவுபொறி விடயங்கள் வினைகளாகி
வினைப்பயனை நுகர்விக்கும் இடனதாகிப்
பெருமையுறு தனக்குரிய பெருமைகாணுப்
பெற்றியனுய் நிட்களனுய் அதீதனுகி
அருமையுறு சகளவடி வினனுக் கோவை
அமர்தருசித் திரவேல ஆடிரூஞ்சல் 8

சஞ்சிதமா தியமூன்றும் அகலமூன்றுச்
சாருமுயிர்க் கதீதநிலை தானேயாகிச்
செஞ்சொலுறு வேதசிவா கமங்கள்தானும்
தெரிவரிய தாரகமெய்ப் பொருளுமாகி
வஞ்சிவடி வாங்கிரியா ஞானமோடு
மருவியளித் திடலாதி ஐந்துங்கொண்டே
மஞ்சுலவு மாடமொளிர் கோவைமேவி
வரமருள்சித் திரவேல ஆடிரூஞ்சல் 9

நான்மறைகள் வாழிசிவா கமமும் வாழி
நலம்பெறுநான் காச்சிரமம் புராணம் வாழி
மேன்மைபெறு மறையவர் யா காதி வாழி
விளம்புறுநற் சிவமுருகன் அடியார் வாழி
மான்விழியார் நிறைவழுவா தென்றும் வாழி
மதிதொறுமும் மாரிபெயும் முகில்கள் வாழி
கான்மலிசீர் வடகோவைப் பதியோர் வாழி
கதியருள்சித் திரவேலர் வாழி வாழி 10

## பராக்கு

துங்கமிகும் யானைமகள் துணைவா பராக்கு
சூரர்குல வேரறுக்குந் தோன்றல் பராக்கு
சங்கநிறை வயற்கோவை சார்ந்தாய் பராக்கு
தாவுமயில் வாகனத்திற் சார்வாய் பராக்கு
அங்கணுறும் உந்துவத்தை அமர்வாய் பராக்கு
ஆகமநூ லோதுபொருள் ஆனாய் பராக்கு
திங்கணுதல் வள்ளிபுணர் செல்வா பராக்கு
திருந்துசித்ர வேற்கரத்துத் தேவே பராக்கு

## எச்சரிக்கை

சீரார்வயற் கோவைநகர் திகழ்வாய் எச்சரீக்கை
தினம்மாலயன் அரிநாடருந் தேவா எச்சரீக்கை
—அருள்தாராய் எச்சரீக்கை
வாரார்திரு வேலேந்திய மகிபா எச்சரீக்கை
வருதேவர்தஞ் சிறைமீட்டருள் வரதா எச்சரீக்கை
—திருமுருகா எச்சரீக்கை
ஏரார்தகர் ஏறும்பர மானாய் எச்சரீக்கை
எழிலார்தெய்வ யானைவள்ளி கணவா எச்சரீக்கை
—தனிமுதலே எச்சரீக்கை
காரார்குழல் உமையாள்தரு கந்தா எச்சரீக்கை
கருணாகர எனையாள்சிவ சுதனே எச்சரீக்கை
—சித்ரவேலா எச்சரீக்கை

## லாலி

பொன்னுலவு மான்மருக குமர லாலி
பூட்கைமுக வற்கிளைய குழக லாலி
என்னுளமு ருக்கியருள் சாமி லாலி
இமயகிரி மாதுசுத குழக லாலி
பன்னுபது மாசனற்கு யோச லாலி
பாலசிவ சுப்ரமண்ய ஈச லாலி
மின்னுலவு வேற்கரத்து விமல லாலி
விசாகசித்ர வேலவற்கு லாலி லாலி

## மங்களம்

நீலமயில் வாகனற்கு மங்களம்—நல்ல
  நித்ய வ்ரேர தயற்கு மங்களம்
பாலவ்டி வானவற்கு மங்களம்—எம்மைப்
  பாலனஞ்செய் வேலவற்கு மங்களம்
சீல அறு மாமுகற்கு மங்களம்—எண்ணில்
  சித்திதரு சண்முகற்கு மங்களம்
கோலசித்ர வேலவற்கு மங்களம்—இந்தக்
  கோவைநகர் மேவினற்கு மங்களம்

## முற்றிற்று

திருத்தரு கோவைதன்னில் திகழுமுந் துவத்துைதமேவி
அருத்தியின் உயிர்கட்கென்றும் அருண்முதல் ஐந்தவான
கிருத்தியம் இயற்றிஞான கிரியையாஞ் சத்தியோடும்
கருத்தனுய் அமருஞ்சித்ர வேலவன் கழல்கள் போற்றி

சோதிமய மானசிவ சாமியருள் பாலா
  தோகைமயில் மீதுவரும் ஆறுமுக நாதா
மாதிரு வோர்தமை மணந்தருளும் ஏகா
  மங்கைசிவ காமியருள் எங்கள்குழ கேசா
பேதையடி யேனியம ஞலிடரு ருதே
  பேசரிய தீவினைகள் தீரவருள் செய்வாய்
காதன்மிகு கோவைநகர் மேவியுறை வோனே
  காமர்கெழு சித்ரவடி வேற்கைமுரு கோனே

சிவசுப்பிரமணிய தேசிகன் திருவடி வாழ்க

# நூலாசிரியர் வரலாறு

சித்திரவேலவர் ஊஞ்சற்பதிகத்தை இயற்றிய ஆசிரியரான பிரம்ம ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஐயரவர்கள், கந்தரோடையில் கந்தர்கோவிலென வழங்கும் விநாயகராலயத்திற்குப் பரம்பரையர்ச்சக உரிமை பூண்டவரும் கௌணியர்குல திலகராய் விளங்கியவருமான விசுவநாத ஐயர் என்பவருக்குப் புதல்வராய்ச் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் தோன்றினர். அக்காலத்தில் சுன்னாகத்திற் பெரும்புலவராய் விளங்கியவரும் அ. குமாரசாமிப் புலவர் முதலிய பலருக்கு ஆசிரியராயிருந்தவருமான முருகேச பண்டிதரிடம் இலக்கிய இலக்கண சமய நூல்களைக் கற்றுப் புலமை பெற்றார்.

பின்பு வடகோவைச் சித்திரவேலாயுத சுவாமிகோவிற் பிரதிஷ்டாபகரான வேதக் குட்டிக் குருக்களின் புதல்வியான இலட்சுமியம்மாவை மணஞ்செய்து இருபிள்ளைகளைப் பெற்றார். மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் கோவிற் பிரதம குருவாயிருக்கும் பிரம்மஸ்ரீ இரத்தினசாமிக் குருக்களும், கோப்பாய் பிரம்மஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்களின் தாயாரான காலஞ்சென்ற மீனாட்சியம்மாவுமே அவ்விருபிள்ளைகளுமாவர்.

இப்புலவர் தென்னிந்தியாவில் தலயாத்திரை செய்து அங்குள்ள அறிஞர்களோடுந் தொடர்பு பூண்டார். கோப்பாயில் தமது இல்லத்தில் மாணவர் பலர்க்கு நல்லாசிரியராயிருந்து கல்வியறிவூட்டிவருங் காலத்தில் நேரய்வாய்ப்பட்டு நடுவயதிலேயே காலகதியடைந்தார்.

செல்லையர் என்னும் பெயரால் பலராலும் அறியப்பட்ட இவர் இவ்வூஞ்சற் பதிகத்தைவிட வேறு தனிப்பாடல்களும் பாடியிருக்கின்றார். இந்நூலில் வெளியிடப்பட்டிருக்கும் அத்தகைய இருபாடல்களில் ஒன்றான சந்தப்புகழ்ப்பா முன்பு அச்சேறுந்து. அவரது ஏட்டுப் பிரதியிற் கண்டெடுத்தது.

## சித்திரவேலவர் ஆலயத்திருவிழா நாட்கள்

1. சித்திரை விஷு (வருஷப் பிறப்பு)
2. வைகாசி சுக்கில ஷஷ்டி முதல் 10 நாள் மகோற்சவம்
3. ,, மகோற்ச முடிவின் மறுநாள் திருக்கல்யாணம்
4. ஐப்பசி விஷு (மாதப் பிறப்பு)
5. ,, வெள்ளிக் கிழமைகள்
6. ,, கந்த ஷஷ்டி (ஆறுநாள் உற்சவமும் ஏழாம் நாள் திருக்கல்யாணமும்)
7. திருக் கார்த்திகை
8. மாசந்தோறும் வரும் கார்த்திகைகள்
9. மார்கழித் திருவாதிரை
10. தைப் பூசம்
11. மாசி மகா சிவராத்திரி
12. பங்குனி உத்தரம்

## மகோற்சவ விபரம்

[குமார தந்திர ஆகம விதியையும் புராண ஐதிகங்களையும் அநுசரித்து இவ்விழாக்கள் ஒழுங்குபடுத்தப் பட்டன.]

| | |
|---|---|
| முதலாந்திருவிழா | துவஜா ரோகணம் (கொடியேற்றம்) |
| 2. ,, | அமிர்தவல்லி சுந்தரவல்லி தவம் |
| 3. ,, | தேவசேனபதிப் பட்டாபிஷேகம் |
| 4. ,, | நடன நாதர் |
| 5. ,, | பக்தர்க்கருளும் பாவனை |
| 6. ,, | வசந்தோற்சவம் |
| 7. ,, | வேட்டைத் திருவிழா |
| 8. ,, | சப்பரத் திருவிழா |
| 9. ,, | தேர்த்திருவிழா |
| 10. ,, | தீர்த்தத் திருவிழா, ஊஞ்சல், கொடியிறக்கம் முதலியன |
| 11. ,, | திருக்கல்யாணம் |

---


பதிப்பாசிரியர்: ச. பஞ்சாட்சர சர்மா

அச்சிடுவித்தவர்: இ. சுப்பையா

கூட்டுறவு அச்சகம், யாழ்ப்பாணம். 1349-71